கூட்டுறவு சுயசேவைப் பிரிவில் ரூ. 200-க்கு 10 பொருள்கள் கொண்ட தொகுப்பு

விற்பனையை ஆட்சியர் தொடங்கிவைத்தார்

தருமபுரி, அக். 30: தருமபுரி பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள அதியமான் கூட்டுறவு சுயசேவைப் பிரிவில், ரூ. 200-க்கு 10 அத்தியாவசிய மளிகைப் பொருள்கள் அடங்கிய சிறப்பு தொகுப்பு விற்பனையை ஆட்சியர் வே.சரவணன் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்தார்.

தமிழக அரசால் நுகர்வோருக்கு அன்றாடத் தேவையான அத்தியாவசிய மளிகைப் பொருள்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் வகையில், 10 மளிகைப் பொருள்கள் அடங்கிய ஒருங்கிணைந்த தொகுப்பு ரூ. 200 விலையில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் வாயிலாக 128 விற்பனை நிலையங்களில் வெள்ளிக்கிழமை முதல் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் சுயசேவைப் பிரிவு, தருமபுரி பழைய பேருந்து நிலையத்திலும், அரூர் வேளாண்மை உற்பத்தியாளர் விற்பனைச் சங்கம் நடத்தும் சுயசேவைப் பிரிவிலும் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

இதில், கடலைப் பருப்பு - 250 கிராம், பாசிப் பருப்பு - 250 கிராம், மிளகாய் - 100 கிராம், தனியா - 150 கிராம், பூண்டு - 150 கிராம், புளி - 250 கிராம், கடுகு - 100 கிராம், உடைத்த உளுத்தம் பருப்பு - 100 கிராம், சீரகம் - 50 கிராம், சோம்பு - 50 கிராம் என மொத்தம் 1,450 கிராம் கொண்ட 10 வகையான மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு ரூ. 200-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விற்பனையை மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தொடங்கிவைத்தார்.



தருமபுரியில் கூட்டுறவு சுயசேவைப் பிரிவில் விற்பனையை தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சியர் வே.சரவணன். உடன், நகராட்சித் தலைவர் லட்சுமி மாது, கூட்டுறவுத் துறை அலுவலர்கள்.

இந்நிகழ்ச்சியில், தருமபுரி நகர்மன்றத் தலைவர் மா.லட்சுமி மாது, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் கு.த.சரவணன், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை துணைப் பதிவாளர் வெ.கோப் பெருந்தேவி, தருமபுரி சரகம் கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் சவிதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2,000 கனஅடி

பென்னாகரம், அக். 30: ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 2,000 கனஅடியாக நீடிக்கிறது.

காவிரி கரையோர நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவந்த மழை முற்றிலுமாக குறைந்ததாலும், கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டதாலும் காவிரி ஆற்றில் நீர்வரத்து சரிந்து வருகிறது. வெள்ளிக்கிழமை நீர்வரத்து விநாடிக்கு 2,000 கனஅடியாக நீடித்து வருகிறது. ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தின் அளவுகளை மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

மோசடி நிதிநிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

தருமபுரி, அக். 30: தருமபுரி மாவட்டத்தில் மோசடியில் ஈடுபட்டு வரும் நிதிநிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தியுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு கூட்டம் தருமபுரி கட்சி அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆர். மல்லிகா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி பகுதியில் இயங்கிய இரு தனியார் நிதிநிறுவனங்கள் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக முதிர்வுத் தொகையையோ அல்லது சீட்டுப் பணத்தையோ வாடிக்கையாளர்களுக்கு திருப்பித் தராமல் ஏமாற்றி வந்துள்ளனர். இதுதொடர்பாக கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அதிகரிக்கும் நிதிநிறுவன மோசடிகள் காரணமாக பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இத்தகைய மோசடிகளை தடுத்து நிறுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நவ. 3-ஆம் தேதி தருமபுரி மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி நவ. 17-ஆம் தேதி தருமபுரி, அரூர் ஆகிய நகராட்சிகள் முன்பும், பேரூராட்சி அலுவலகங்கள் முன்பும் ஆர்ப்பாட்டம் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒசூர் அருகே

காட்டுயானைகளால் நெல் வயல், பூந்தோட்டம் சேதம்

ஒசூர், அக். 30: ஒசூர் அருகே விளைநிலங்களில் புகுந்த யானைகள் நெற்பயிர்களை மிதித்து, தின்றும், பூந்தோட்டத்தை சேதப்படுத்தியும் சென்றதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலம், பன்னர்கட்டா வனப் பகுதியில் இருந்து ஒசூர் வனப்பகுதிக்கு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான யானைகள் வந்து செல்வது வழக்கம். இந்நிலையில், பன்னர்கட்டா காடுகளில் இருந்து பொம்மைப்பள்ளி வழியாக கிருஷ்ணகிரி மாவட்டம், சானமாவு காடு அருகே அமைந்துள்ள பீர் ஜேப்பள்ளி ஏரிப் பகுதிக்கு 4 காட்டு யானைகள் வியாழக்கிழமை இரவு வந்தன.

இந்த யானைகள் ஏரி அருகே உள்ள விளைநிலத்தில் நெற்கதிர்களை தின்றும், பூந்தோட்டத்தை மிதித்தும் சென்றதால் பயிர்கள் சேதமடைந்தன. இதுபோன்று விளைநிலங்களை தொடர்ந்து நாசப்படுத்தி வருவதால், விவசாயிகள் பெரும் இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.



யானைகள் மிதித்து சேதமடைந்த நெல்வயல்.

இந்த யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்ட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு வனத் துறையினர் உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.



கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரப்பு பணிகள் நடைபெறுவதால், சனிக்கிழமை (அக். 31) காலை 9 மணிமுதல் மதியம் 2 மணிவரை கீழ்கண்ட பகுதிகளில் மின்தடை செய்யப்படும் என மின்கோட்ட செயற்பொறியாளர் மா.பவுன்ராஜ் தெரிவித்துள்ளார்.

மின்தடை பகுதிகள்: கிருஷ்ணகிரி நகர், தொழில்பேட்டை, பவர் ஹவுஸ் காலனி, சந்தைப்பேட்டை,அரசுமருத்துவமனை, சென்னை சாலை, ஜக்கப்பன் நகர், வீட்டுவசதி வாரியம் பகுதி - 1, பகுதி - 2, பழையபேட்டை, காட்டிநாயனப்பள்ளி, அரசு ஆண்கள் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி அணை, சுண்டேகுப்பம், குண்டலப்பட்டி, கத்தேரி, சூலகுண்டா, ஆலப்பட்டி, மிட்டப்பள்ளி, மாதேப்பட்டி, கங்கலேரி, தாளாப்பள்ளி, செம்படமுத்தூர், பெல்லாரம்பள்ளி, கூலியம், காந்தி நகர், சாந்தி நகர், வீரப்பன் நகர், வெங்கட்டாபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள்.





உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(8)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ், உரிமையாளர்: திருமதி.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ், பிளாட் எண்.A3. சிட்கோ ஃபேஸ் 1, சிப்காட், ஒசூர் 635126. **தற்போதைய முகவரி : M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ்,** 108, உள்ளியாளம் கிராமம், பாகலூர் மெயின் ரோடு, ஒசூர் - 635109. **திருமதி. N. கனிமொழி,** HIG70, 7வது ஃபேஸ், TNHB, பிருந்தாவன் நகர், முருகன் கோவில் அருகில் ஒசூர் - 635109. **திருமதி.N.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ்,** ஜெயம் ஆட்டோ காம்போனென்ட்ஸ், பிளாட் எண் 16, சர்வே எண் 597-ன் ஒரு பகுதி, நியூ சிட்கோ தொழிற்பேட்டை, ஸ்ரீ நகர், எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் தொழிற்பேட்டைக்கு அருகில், ஒசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்-635109. **கடன் நிலுவைத் தொகை : 28.10.2026 வரையில் ரூ.5,63,67,942.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 01.10.2021. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 18.08.2026. சொத்து விபரம் :** 14.41 சென்ட் அல்லது 6283.00 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம் மற்றும் தொழிற்சாலை கட்டிடம் சகிதமான சொத்து பின்வருமாறு அமைந்துள்ளது. பிளாட் எண்.16, S.No. 597 பாகம், புதிய சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஸ்ரீ நகர், எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் அருகில், ஒசூர் நகர முனிசிபல் கார்ப்பரேஷன், கிருஷ்ணகிரி மாவட்டம் 635109. சொத்தின் எல்லைகள் : வடக்கில் 12 மீட்டர் சிட்கோ சாலை, தெற்கில் சிட்கோ CP நிலம். கிழக்கில் பிளாட் எண். 21, மேற்கில் 9 மீட்டர் சாலை. **M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.3,08,00,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.30,80,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 16.11.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 07.11.2026 முதல் 13.11.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 16.11.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **16.11.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 28.10.2026
இடம் : ஒசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

